**REVISED**

**செ. கு. எண்**:153 **நாள்**:29.10.2011

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை – 29.10.2011**

பாரதிய ஜனதா கட்சியின் மூத்தத் தலைவரும், முன்னாள் பாரத துணை பிரதமருமான திரு. எல்.கே. அத்வானி அவர்கள் மக்கள் விழிப்புணர்வு யாத்திரை மேற்கொண்ட போது, 28.10.2011 அன்று அவர் செல்ல இருந்த திருமங்கலம் – ராஜபாளையம் சாலையில் உள்ள ஆலம்பட்டி என்னும் கிராமத்தில் கவண்டன் ஆற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலத்தின் அடியில் வைக்கப்பட்டிருந்த பைப் வெடிகுண்டு, ஆலம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கவுன்சிலர் திரு. **செல்வம்** மூலமாக காவல் துறையினருக்கு தெரியப்படுத்தப்பட்டு இருக்கிறது. இதனையடுத்து காவல் துறையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று அந்த பைப் வெடிகுண்டினை செயலிழக்கச் செய்து, நாசவேலையை முறியடித்துள்ளனர். எந்தவித அசம்பாவிதமும் நடைபெறாமல் சதிச் செயல் முறியடிக்கப்பட்டது எனக்கு மன நிம்மதியை அளிக்கிறது.

இந்த சதிச் செயலை முறியடிப்பதற்கு காரணமாக இருந்த **ஆலம்பட்டி** கிராமத்தைச் சேர்ந்த திரு. செல்வராஜ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கவுன்சிலர் திரு.**செல்வம்**, காவல் துறையினர் மற்றும் வெடிகுண்டை செயலிழக்கச் செய்த நிபுணர்களுக்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இது குறித்து பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர் திரு. எல்.கே. அத்வானி அவர்கள் இன்று (29.10.2011) என்னுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, சதிச்செயலை முன்கூட்டியே முறியடித்ததற்கு தனது நன்றியினை தெரிவித்துக் கொண்டார்.

இந்தச் சம்பவம் குறித்து காவல் துறையினர் வழக்கு பதிவு செய்து தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சதிச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்திட நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**